செய்தி வெளியீடு

Ontario

மார்ச் 24, 2021

# ஒன்ராறியோவின் செயற்திட்டம்: மக்களின் ஆரோக்கியத்தையும் எமது பொருளாதாரத்தையும் பாதுகாத்தல்

## 2021 Budget (வரவு செலவுத் திட்டம்) *மாகாணத்தின் COVID-19 க்கு எதிரான பதில் நடவடிக்கைத் தொகையை $51 பில்லியனுக்குக் கொண்டு வருகின்றது*

ரொறன்ரோ – இன்று, நிதி அமைச்சரும், திறைசேரித் தலைவருமான (Minister of Finance and President of the Treasury Board) Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் செயற் திட்டத்தை* : *மக்களின் ஆரோக்கியத்தையும் நமது பொருளாதாரத்தையும் பாதுகாத்தல்* (Ontario's Action Plan: Protecting People's Health and Our Economy) வெளியிட்டார். COVID-19 க்கு எதிரான ஒன்ராறியோவின் பதில் நடவடிக்கையின் அடுத்த கட்டம் தான் *2021 Budget*, அத்துடன் இது தொற்றுநோய்ப் பரம்பலின் போது அரசாங்கம் வழங்கிய இரண்டாவது வரவுசெலவுத் திட்டமாகும்.

"ஆரோக்கியமான மக்கள் இல்லாமல் உங்களுக்கு ஆரோக்கியமான பொருளாதாரம் இருக்க முடியாது" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "கடந்த ஒரு வருடமாக, COVID-19 இலிருந்து மக்களைப் பாதுகாப்பதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகின்றோம். பல சவால்கள் நம் முன்னால் உள்ளன. ஆனால் மாகாணத்தின் ஒவ்வொரு மூலையிலும் தடுப்பூசிகள் விநியோகிக்கப்படுவதால், நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியுள்ளது. ஒரு வருடத்திற்கு முன்பு நாம் தொடங்கிய வேலையை முடிப்பதற்கு இப்போது நாம் தயாராக உள்ளோம்."

உலகளாவிய தொற்றுநோய்க்குப் பதிலளிக்கும் விதமாக, மொத்த முதலீடுகளாக மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கு $16.3 பில்லியன் தொகையையும் நமது பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கு $23.3 பில்லியன் தொகையையும் இந்த *2021 Budget,* அரசாங்கத்தின் அதிகூடிய முதலீடுகளாக ஒதுக்கியுள்ளது. ஒன்ராறியோவின் COVID-19 செயற்திட்ட உதவித் தொகை இப்போது மொத்தம் $51 பில்லியன் ஆகும்.

“இறுதியில் தொற்றுநோய் நமக்குப் பின்னாகப் போய்விடும். இது சில மாதங்களில் நடக்கும், பல ஆண்டுகளுக்கு நீடிக்காது, ” என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். “Team Ontario (ஒன்ராறியோ அணி) இன் கடின உழைப்பு மற்றும் தியாகத்தின் மூலம் நாங்கள் அந்த நாளைக் கண்டடைவோம். மக்களின் உடல்நலம் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டைச் சிறப்பாகச் செய்வதற்கான ஒவ்வொரு படிநிலையிலும் நமது அரசாங்கம் உடனிருக்கப் போகின்றது. இந்த அத்தியாயம் இறுதியாக மூடப்படும்போது, வேலைவாய்ப்பு, செழிப்பு மற்றும் மாகாணத்தை மேலும் வலுவானதாக்குவதற்குத் தேவையான பொருளாதார வளர்ச்சியை ஒன்ராறியோ மக்கள் கட்டவிழ்த்து விடப்போகிறார்கள் என்று நான் நம்புகின்றேன். ”

**மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்** என்பதே *2021 Budget* இன் முதலாவது அடிப்படைத் திட்டமாகும். COVID-19 ஐத் தோற்கடிப்பது, நீண்ட-காலப் பராமரிப்பை ஒழுங்காக்குதல் மற்றும் மக்களைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் இதில் உள்ளடங்கும்.

“சுரங்கப்பாதையின் முடிவில் காணப்படும் வெளிச்சம் போன்றதே தடுப்பூசிகள், அத்துடன் தடுப்பூசிகள் மாகாணத்திற்கு வரும்போது அவற்றை உடனடியாகக் கைகளில் ஏந்திப் பெற்றுக்கொள்ள உதவியாளர்கள் தயாராக உள்ளனர்" என அமைச்சர் Bethlenfalvy கூறினார். " இந்தத் தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து, மேலதிகமான மருத்துவமனைப் படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மருத்துவமனைகளை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும், சோதனைகளை அதிகரிப்பதற்கும், நீண்ட-காலப் பராமரிப்பை ஒழுங்கமைப்பதற்கும் என அதிகூடிய முதலீடுகளை ஒதுக்கீடு செய்வதன் மூலம்,.இன்றும் தொடர்ந்து நீண்ட காலத்துக்கும் எமது சுகாதாரப் பராமரிப்புத் துறையில் நாம் தொடர்ந்து முதலீடுகளைச் செய்து வருவோம், "

COVID-19 **ஐத் தோற்கடிப்பதற்கு** ஒன்ராறியோவின் திட்டத்திலுள்ள சிறப்பம்சங்கள்:

- இந்த மாகாணத்தில் உள்ள தடுப்பூசி போட விரும்பும் ஒவ்வொரு நபருக்கும் தடுப்பூசி போடுவதற்காக, மாகாண அளவிலான ஒரு தடுப்பூசித் திட்டத்திற்கென $1 பில்லியனுக்கும் அதிகமான தொகையை ஒன்ராறியோ ஒதுக்கியுள்ளது. சோதனை மற்றும் தொடர்புத் தடமறிதலுக்காக $2.3 பில்லியன் தொகையை ஒதுக்கிப் பணியிடங்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுடன் மக்கள் மீண்டும்-இணைக்கப்படுவதையும் ஒன்ராறியோ பாதுகாப்பானதாக்குகின்றது.

- முன்னணி நிலையில் நின்று பணிபுரியும் வீரர்களையும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்களையும் பாதுகாப்பதற்காக, ஒன்ராறியோ 315 மில்லியனுக்கும் அதிகமான முகக்கவசங்கள் மற்றும் 1.2 பில்லியனுக்கும் அதிகமான கையுறைகள் உள்ளிட்ட தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்காக $1.4 பில்லியன் தொகை நிதியுதவியைச் செய்துள்ளது.
- தொற்றுநோயின் மிக மோசமான காலங்களிலும் கூட, மருத்துவமனை ஒன்றில் பராமரிப்புத் தேவைப்படும் ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு படுக்கை இருக்கக் கூடிய நிலையை உறுதி செய்வதற்காகத், தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து மருத்துவமனைகளுக்கு உதவுவதற்கு அரசாங்கம் கூடுதலாக $5.1 பில்லியன் தொகையை முதலீடு செய்து 3,100 க்கும் மேற்பட்ட மேலதிகமான மருத்துவமனைப் படுக்கை வசதிகளை உருவாக்கி வருகின்றது. COVID-19 நோயாளிகளுக்குத் தொடர்ந்து பராமரிப்பு வழங்குவதற்கும், அறுவைச்சிகிச்சைப் பின்னடைவுகளை நிவர்த்தி செய்வதற்கும் நோயாளரின் தேவைகளுக்கு ஏற்ப சேவை புரிவதற்கும் 2021–22 இல் வழங்கப்படும் $1.8 பில்லியன் தொகை இதில் அடங்குகின்றது.

**நீண்ட-காலப் பராமரிப்பை ஒழுங்கமைப்பதற்கு** ஒன்ராறியோவின் திட்டத்திலுள்ள சிறப்பம்சங்கள்:

- நீண்ட-காலப் பராமரிப்புக்குரிய 30,000 புதிய படுக்கை வசதிகளை ஏற்படுத்த உதவுவதற்காக, இனிவரும் நான்கு ஆண்டுகளில் மேலதிகமாக $933 மில்லியனைக் கொடுத்து மொத்தமாக $2.6 பில்லியன் தொகையை முதலீடு செய்வதன் மூலம், பல தசாப்த காலப் புறக்கணிப்பை நிவிர்த்தி செய்து, நீண்ட-காலப் பராமரிப்பகத்தில் இடம் கிடைப்பதற்காகக் காத்திருப்பவர்களுக்கு ஒன்ராறியோ உதவுகின்றது. அன்புக்குரியவர்கள் ஆறுதலாகவும் பாதுகாப்பாகவும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வாழக்கூடிய வண்ணம், வீடுகளில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு குளிரூட்டல் சாதனம் (air conditioning) இருப்பதை உறுதி செய்வது உட்படத் தற்போதுள்ள வீடுகளில் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக, ஒன்ராறியோ அடுத்த நான்கு ஆண்டுகளில் $246 மில்லியனை முதலீடு செய்கின்றது.
- உயிர்கொல்லியான COVID-19 வைரஸிலிருந்து நீண்ட-காலப் பராமரிப்பிலுள்ள அன்புக்குரியவர்களைப் பாதுகாக்க, ஒன்ராறியோ 2021–22 ஆம் ஆண்டில் மேலதிகமாக $650 மில்லியனை முதலீடு செய்கின்றது, மிக எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாக்க, தொற்றுநோய்த் தொடக்கத்திலிருந்து மொத்த வளங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகையை இது $2 பில்லியனுக்கும் அதிகமானதாக்குகின்றது.

- நீண்ட-காலப் பராமரிப்பகத்தில் சராசரியாக வழங்கப்படும் நேரடியான தினசரிப் பராமரிப்பை ஒரு நாளைக்கு நான்கு மணிநேரமாக அதிகரிப்பதற்காகத்,  தனிநபர் உதவித் தொழிலாளர்கள் (PSW கள்) மற்றும் தாதிகள் உட்பட 27,000 க்கும் மேற்பட்டவர்களைப் புதிதாகப் பணிகளில் அமர்த்துவதன் மூலம், அன்புக்குரியவர்கள் கனடாவில் மிகச்சிறந்த தரமான பராமரிப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, ஒன்ராறியோ எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் $4.9 பில்லியனை முதலீடு செய்கின்றது.

**மக்களைக் கவனிப்பதற்காக** ஒன்ராறியோவின் திட்டத்திலுள்ள சிறப்பம்சங்கள்:

- மேலதிக சுகாதாரப் பராமரிப்பு சேவைகளின் தேவையை நிவர்த்தி செய்வதற்காக, William Osler Health System’s Peel Memorial இல் ஒரு புதிய உள்நோயாளர் பிரிவு மற்றும் Windsor-Essex இல் ஒரு புதிய பிராந்திய மருத்துவமனைக்கான தொடர்ச்சியான திட்டமிடல் ஆகியவற்றை உள்ளடக்கிய வரலாற்று ரீதியான  மருத்துவமனை விரிவாக்கம் மற்றும் கட்டமைப்புத் திட்டங்களுக்கு உதவுவதற்காக ஒன்ராறியோ பல முதலீடுகளைச் செய்து வருகின்றது.
- உதவி தேவைப்படும் அனைவருக்கும் மேலதிகமான சிறந்த பராமரிப்பை வழங்கும் நோக்கில், எதிர்வரும் 10 ஆண்டுகளில் செய்யப்படும் வரலாற்று ரீதியான முதலீடாகிய $3.8 பில்லியன் தொகையின் ஒரு பகுதியாக, மனநலம் மற்றும் போதைக்கான அடிமைத்தனம் போன்ற பிரச்சினைகளுடன் போராடும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவுவதற்காக,  2021-22 இல் $175 மில்லியன் நிதியுதவியை மேலதிகமாக ஒன்ராறியோ வழங்குகின்றது.

மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான ஒன்ராறியோவின் திட்டத்தைப் பற்றி மேலும் அறிக.

**நமது பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்** என்பது *2021 Budget* இன் இரண்டாவது அடிப்படைத் திட்டமாகும். குடும்பங்கள், தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளை ஆதரிக்கும் ஒன்ராறியோவின் திட்டத்தை இது கோடிட்டுக் காட்டுகின்றது.

"தேவைப்பட்ட பொது சுகாதார நடவடிக்கைகள் யாவும் தொழிலாளர்கள், குடும்பங்கள் மற்றும் வணிக உரிமையாளர்களுக்கு செலவினை ஏற்படுத்தியுள்ளன, ஆனால் அவை பல உயிர்களைக் காப்பாற்றின என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "செய்யப்பட்ட தியாகங்களை நாங்கள் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கின்றோம். தொற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு கூடுதல் நிவாரணத்தையும் ஆதரவையும் வழங்க நாங்கள் மேலதிக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம், இதில் பெற்றோருக்கு மூன்றாவது தடவையாக நேரடியான கொடுப்பனவுகளை வழங்குதல், ஒன்ராறியோ சிறு வணிக ஆதரவு மானியத்தை (Ontario Small Business Support Grant) இரட்டிப்பாக்குதல் மற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களின் பயிற்சிக்கான செலவுகளுக்கு உதவுதல் ஆகியவை அடங்கும்."

**தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களை ஆதரிப்பதற்கு** ஒன்ராறியோவின் திட்டத்திலுள்ள சிறப்பம்சங்கள்:

- தொழிலாளர்களுக்கு அவர்களின் பயிற்சிக்கான செலவுகளுக்கு உதவுவதற்காக, 2021 க்கான புதிய ஒன்ராறியோ வேலைப் பயிற்சி வரிக்கழிவினை (Ontario Jobs Training Tax Credit) அரசாங்கம் முன்மொழிகின்றது. 2021 இல், தகுதியான செலவுகளின் 50 சதவீதம் எனும் அடிப்படையில் ஒரு பெறுநருக்கு $2,000 வரை வழங்கி, சுமார் 230,000 மக்களுக்கு உதவுவதன் மூலம், மொத்தம் $260 மில்லியன் தொகை வரை செலவாகும் என மதிப்பிடப்படுகின்றது.

- தொற்றுநோயால் புதிய அழுத்தங்களையும் செலவுகளையும் எதிர்கொண்ட — குடும்பங்களுக்கு உதவுவதற்காக — மேலதிகமாகப் பணத்தை அவர்கள் வசம் வைத்துக் கொள்ளுவதற்கு, ஒன்ராறியோ COVID-19 சிறுவர் நிதியம் (Ontario COVID-19 Child Benefit) மூலம், பெற்றோருக்கு ஆதரவாக அரசாங்கம் மூன்றாவது சுற்றுக் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் கடந்த மார்ச் முதல் மொத்தம் $1.8 பில்லியன் நிதியுதவியை வழங்கியுள்ளது, இத்தடவை ஒரு பிள்ளைக்கு $400 ஆகவும், சிறப்புத் தேவைகளைக் கொண்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் $500 ஆகவும் கொடுப்பனவு இரட்டிப்பாகும், அதாவது மூன்று இளம் பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பம், அவர்களில் ஒருவருக்கு சிறப்புத் தேவைகள் இருப்பின் , மூன்றாம் தடவைக் கொடுப்பனவுகளாக மொத்தம் $2,600 ஐப் பெற்றுக்கொள்ளும்.
- சிறுவர் பராமரிப்பு செலவில் பெற்றோருக்கு உதவுவதற்கும், அவர்கள் மீண்டும் பணியில் சேர்வதற்கு உதவுவதற்கும், 2021 ஆம் ஆண்டிற்கான CARE வரிக்கழிவினை 20 சதவீதம் அதிகரிக்க அரசாங்கம் முன்மொழிகின்றது. இது நிதியுதவியை சராசரியாக $1,250 இலிருந்து $1,500 ஆக அதிகரிப்பதனால், 300,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் சிறுவர் பராமரிப்புச் செலவுகளுக்கு, சுமார் $75 மில்லியன் தொகையான மேலதிக ஆதரவை வழங்கும்.

**வேலைகளை ஆதரிப்பதற்கு** ஒன்ராறியோவின் திட்டத்திலுள்ள சிறப்பம்சங்கள்:

- COVID-19,இலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான கட்டுப்பாடுகளால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள சிறு வணிகங்களுக்கு உதவ, ஒன்ராறியோ இரண்டாவது தடவையாக ஒன்ராறியோ சிறு வணிக ஆதரவு மானியக் கொடுப்பனவுகளை (Ontario Small Business Support Grant) தகுதியான பெறுநர்களுக்கு வழங்குகின்றது. மேலதிகமான $1.7 பில்லியன் நிவாரணத்திலிருந்து இந்த இரண்டாவது தடவை உதவி மூலம் ஏறக்குறைய 120,000 சிறு வணிகங்கள் குறைந்தபட்சம் $10,000 இலிருந்து $20,000 வரை மானிய வடிவத்தில் நேரடியாகவே பயனடைகின்றன - வழங்கப்படும் இந்த மானியத்தின் மூலம், மொத்த நிதியுதவித் தொகை $3.4 பில்லியனை எட்டும் எனக் கணிக்கப்படுகின்றது.

- COVID-19 தொற்றுநோயால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஒன்ராறியோவின் சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் கலாச்சாரத் தொழில்களுக்கு உதவுவதற்காக, அடுத்த மூன்று ஆண்டுகளில் மேலதிகமாக $400 மில்லியனை இந்தத் துறைகளை ஆதரிப்பதற்கான புதிய முயற்சிகளில் ஒன்ராறியோ முதலீடு செய்கின்றது. இது முன்னர் அறிவிக்கப்பட்ட $225 மில்லியன் முதலீடுகளுடன் சேர்ந்து தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து வழங்கப்பட்ட மொத்த நிதியுதவித் தொகையை $625 மில்லியனை விட அதிகமாக்குகின்றது.
- இது ஒரு ஆடம்பரமல்ல, ஒரு தேவை என COVID-19 நிரூபித்துள்ளபடி—வீடுகள், வணிகங்கள் மற்றும் சமூகங்களைப் பரந்தளவில் இணைப்பதற்கு—ஒன்ராறியோ $2.8 பில்லியனை முதலீடு செய்வதன் மூலம், 2019–20 இல் தொடங்கி அடுத்து வரும் ஆறு ஆண்டுகளில் மாகாணத்தின் மொத்த முதலீட்டை க் கிட்டத்தட்ட $4 பில்லியன் தொகையாக ஆக்குகின்றது.

**சமூகங்களை ஆதரிப்பதற்கு** ஒன்ராறியோவின் திட்டத்திலுள்ள சிறப்பம்சங்கள்:

- COVID-19 ஆல் ஏற்படும் மேலதிக செலவுகள் காரணமாகப் போராடும், நம்பிக்கை-அடிப்படையிலான மற்றும் கலாச்சார அமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் வண்ணம், தகுதியான நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்காக ஒன்ராறியோ $50 மில்லியன் தொகை வரை நிதியுதவி செய்யும்.
- COVID-19 க்கு எதிரான போராட்டத்தில் மாகாணத்தின் முக்கிய பங்காளிகளான ஒன்ராறியோவின் 444 நகர சபைகளை ஆதரிப்பதற்காக, அரசாங்கம் 2021 இல் மேலதிகமாகக் கிட்டத்தட்ட $1 பில்லியன் நிதி நிவாரணத்தை முக்கியமான பொது சேவைகளைப் பாதுகாப்பதற்கும் பொருளாதார மீட்சிக்கு உதவுதற்கும் வழங்குகின்றது.

எமது பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஒன்ராறியோவின் திட்டத்தைப் பற்றி மேலும் அறிக.

*விரைவுச் செய்திகள்*

- உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்களைப் போலவே, ஒன்ராறியோவும் COVID-19 தொற்றுநோயால் கணிசமானளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மாகாணத்தின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020 இல் 5.7 சதவீதத்தால் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரம் மீண்டு வருவதால், ஒன்ராறியோவின் உண்மையான GDP யும் வேலைவாய்ப்பும் 2022 இன் முற்பகுதியில், தொற்றுநோய்க்கு-முன்னர் அவை இருந்த நிலைகளை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2020–21இல் $38.5 பில்லியன் தொகைப் பற்றாக்குறையை ஒன்ராறியோ முன்வைக்கின்றது. அடுத்து வரும் இடைக்காலப்பகுதியில், பற்றாக்குறைகள் 2021-22 இல் $33.1 பில்லியன் தொகையாகவும் 2023-24 இல் $20.2 பில்லியன் தொகையாகவும் குறைவடையும் என அரசாங்கம் கணிப்பிட்டுள்ளது.
- பொருளாதாரத்தில் காணப்படும் பெருமளவிலான நிச்சயமற்ற தன்மையைக் குறித்து வெளிப்படையான தகவல்களை வழங்குவதற்காக, அடுத்த பல ஆண்டுகளில் பொருளாதாரம் அடையக்கூடிய வேகமான வளர்ச்சி மற்றும் மந்தமான வளர்ச்சிகளின் எதிர்கால நிகழ்முறைகளை *2021 Budget* உள்ளடக்குவதுடன், ஒன்ராறியோவின் நிதிகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் அது விளக்குகின்றது.

*மேலதிக ஆதாரவளங்கள்*

2021 வரவு செலவுத் திட்டம்—ஒன்ராறியோவின் செயற் திட்டம்:மக்களின் ஆரோக்கியத்தையும் நமது பொருளாதாரத்தையும் பாதுகாத்தல்

ஒன்ராறியோவின் செயற் திட்டத்தின் சிறப்பம்சங்களைப் படிக்கவும் மக்களின் ஆரோக்கியத்தையும் நமது பொருளாதாரத்தையும் பாதுகாத்தல்

மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்

நமது பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்

பொருளாதார மற்றும் காலாண்டு நிதிக் கண்ணோட்டம்

சட்டப்பேரவைக்கான அமைச்சரின் அறிக்கையை வாசிக்கவும்

2020 ஒன்ராறியோ வரவு செலவுத் திட்டம் — ஒன்ராறியோவின் செயற் திட்டம்: பாதுகாப்பு, ஆதரவு, மீட்சி